செய்தி மூன்று

## மணவாட்டியின் முதிர்ச்சி

வேத வாசிப்பு: வெளி. 19:6-9; யோவா. 3:29; யாக். 5:7; மத். 5:48; கொலோ. 1:28-29; 3:10-11

**I. கிரேக்க மொழியில் *முதிர்ச்சி* என்ற வார்த்தையின் அர்த்தம் "இறுதி கட்டத்தில்" என்பதாகும்:**

A. மறுசாயலாக்கப்படுவது என்றால் நம் இயற்கையான ஜீவனில் வளர்சிதைரீதியில் மாற்றமடைவதாகும்; முதிர்ச்சியடைவது என்றால் நம்மை மாற்றுகிற தெய்வீக ஜீவனைக் கொண்டு நிரப்பட்டிருப்பதாகும்—எபி. 6:1; கொலோ. 4:12; ரோ. 12:2; 2 பேது. 1:3.

B. மறுசாயலாகுதலின் இறுதி நிலை முதிர்ச்சியாகும், அதாவது, ஜீவனின் நிறைவாகும்—வ. 4.

C. ஒரு முதிர்ச்சியடைந்த விசுவாசி, சரீர உணர்வுள்ளவனாகவும் சரீரத்தை மையமாகக் கொண்டவனாகவும், கிறிஸ்துவின் சரீரத்தை அறிந்திருக்கிறான், அதற்காக கரிசனைகொள்கிறான்—1 கொரி. 12:16, 18-19, 21, 24.

**II. புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளபடி, முதிர்ச்சி என்ற வார்த்தை, விசுவாசிகள் மறுபடிஜெநிப்பிக்கப்பட்ட நேரத்தில் பெற்றுக்கொண்ட கிறிஸ்துவின் ஜீவனில் முழுவளர்ச்சியடைந்து, பூரணமாக்கப்பட்டிருப்பதைக் குறிக்கிறது—தீத்து 3:5; 1 பேது. 1:3, 23; மத். 5:48:**

A. நாம் நம்மிலே ஒருபோதும் மனநிறைவடையக்கூடாது, மாறாக, கிறிஸ்துவின் ஜீவனில் வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் ஆவலாய்ப் பின்தொடர வேண்டும்—பிலி. 3:12, 14.

B. நாம் பின்னானவற்றை மறந்து முன்னானவற்றை நாடி, ஆயிர வருட இராஜ்ஜியத்திலுள்ள கிறிஸ்துவின் முற்றும் முழுமையான அனுபவமகிழ்ச்சிக்காகக் கிறிஸ்துவை முழுக்க முழுக்க அனுபவித்துமகிழ்வதையும் அவரை ஆதாயம்பண்ணுவதையும் ஆசையாய்த் தேடி, முதிர்ச்சிக்கு முன்செல்ல வேண்டும், முதிர்ச்சிக்குக் கொண்டுவரப்பட வேண்டும்—வவ. 12-15.

C. ஆவிக்குரிய வாழ்க்கையில் முதிர்ச்சிக்கான முன்நிபந்தனை, தெய்வீக ஜீவனில் தொடர்ச்சியாக வளர்வதாகும்—எபே. 4:15.

D. கிறிஸ்துவின் ஜீவனில் விசுவாசிகளுடைய வளர்ச்சி மற்றும் முதிர்ச்சியின் உச்சநிலையான விளைவு, முழுவளர்ச்சியடைந்த மனிதனாவான், அதாவது, கிறிஸ்துவின் சரீரமாக சபை ஒரு முதிர்ச்சியடைந்த மனிதனாக வளர்வதாகும்—வ. 11.

**III. யாக்கோபு தன் நிருபத்தில், பூமியின் மதிப்புவாய்ந்த பலனுக்காக நீடிய பொறுமையுடன் காத்திருக்கும் விவசாயியின் உதாரணத்தைப் பயன்படுத்துகிறான்—5:7:**

A. கர்த்தராகிய இயேசு உண்மையில் ஒரு நிஜமான விவசாயி, ஓர் ஒப்பற்ற விவசாயி—மத். 13:3.

B. நாம் கர்த்தருடைய வருகைக்காக நீடிய பொறுமையுடன் காத்திருக்கையில், அவர் நிஜமான விவசாயியாக, தம் வயலின் முதற்பலன்கள் மற்றும் அறுவடையாக, ஜீவனில் நம் முதிர்ச்சிக்காக பொறுமையுடன் காத்துக்கொண்டிருக்கிறார்—வெளி. 14:4, 14-15.

C. நாம், "கர்த்தாவே, சீக்கிரமாகத் திரும்பிவாரும்" என்று ஜெபித்தால், கர்த்தர், "நீங்கள் என்னுடைய திரும்பி வருதலுக்காகக் காத்திருக்கையில், நான் உங்கள் முதிர்ச்சிக்காகக் காத்திருக்கிறேன்; உங்கள் முதிர்ச்சியால் மட்டுமே என்னுடைய திரும்பி வருதலைத் துரிதப்படுத்த முடியும்" என்று கூறக்கூடும்.

D. நாம் கர்த்தருடைய திரும்பி வருதலுக்காகக் காத்திருப்பதைக் குறித்து தீவிரமாக இருந்தால், நாம் ஜீவனில் முதிர்ச்சிக்கென்று வளர வேண்டும் என்பதை உணர்ந்தறிவது ஒரு மிகப்பெரிய உதவியாய் இருக்கும்.

**IV. முதிர்ச்சியடைவதென்றால், கிறிஸ்து நம்மில் முழுமையாக உருவாக்கப்படுவதைப் பெறுவதாகும்; நாம் முழுமையாக அவரது சாயலாக மறுசாயலாக்கப்பட்டிருக்கிறோம் என்பதும் அதன் அர்த்தமாகும்—கலா. 4:19; 2 கொரி. 3:18:**

A. நாம் மறுபடிஜெநிப்பிக்கப்பட்ட நேரத்திலிருந்து, கர்த்தர், நாம் அவருடைய சாயலைப் பெறுமாறு நம்மில் வேலைசெய்துவருகிறார்—வ. 18; ரோ. 8:29.

B. கர்த்தர் தம் சாயலை நமக்குள் முழுவதுமாக அடித்துருவாக்கி, நம்மூலமாக முழுமையாக வெளிக்காட்டப்படும்போது, நாம் ஜீவனில் முதிர்ச்சியடைந்திருப்போம்—எபே. 3:16-17.

**V. உன்னதப்பாட்டின் 3ஆம் அதிகாரம் தேடுபவளுடைய முதிர்ச்சியை நமக்குக் காட்டுகிறது, தொடர்ந்து 4ஆம் அதிகாரம், அத்தகைய முதிர்ச்சி சித்தம் கீழ்ப்படுத்தப்படுவதன்மூலம் எட்டப்படுகிறது என்று விளக்குகிறது;**

**தேடுபவளுடைய முதிர்ச்சியின் இரகசியம், அவளது சித்தம் முழுமையாகக் கீழ்ப்படுத்தப்பட்டிருப்பதும், உயிர்த்தெழுப்பப்பட்டிருப்பதும் ஆகும்—வ. 4:**

A. கழுத்து, தேவனுக்குக் கீழுள்ள மனித சித்தத்தை அடையாளப்படுத்துகிறது; கர்த்தர், நம் சித்தம் பணிந்தடங்குவதை மிகவும் அழகான ஒன்றாகக் கருதுகிறார்—வவ. 1, 4.

B. நமக்குப் பணிந்தடங்கும் சித்தம் இருந்தால், நம் சித்தம், எல்லா விதமான ஆயுதங்களையும் வைத்திருக்கிற தாவீதின் கோபுரத்தைப் போல வெளிக்காட்டப்படுகிறது:

1. முதலில், நம் சித்தம் கீழ்ப்படுத்தப்பட்டாக வேண்டும்; அப்போது அது உயிர்த்தெழுதலில் பலமாகவும், தாவீதின் கோபுரத்தைப் போல ஆவிக்குரிய யுத்தத்தின் ஆயுதசாலையாகவும் இருக்கும்—எபே. 6:10.
2. ஆவிக்குரிய யுத்தத்திற்கான ஆயுதங்கள், கீழ்ப்படுத்தப்பட்டு உயிர்த்தெழுப்பப்பட்ட நம் சித்தத்தில் வைக்கப்படுகின்றன—2 கொரி. 10:3-5.

**VI. பவுலுடைய ஊழியத்தின் இலக்கு, ஒரே புதிய மனிதனுக்காகக் கிறிஸ்துவில் ஒவ்வொரு மனிதனையும் முதிர்ச்சியடைந்தவனாக, அதாவது, முழுவளர்ச்சியடைந்தவனாக வழங்குவதாய் இருந்தது—கொலோ. 1:28-29; 3:10-11:**

A. கொலோசெயர் 1:28இல் "முழுவளர்ச்சியடைந்த" என்று மொழிபெயர்க்கப்படும் கிரேக்க வார்த்தை, "பூரணமான", "முழுமையான", அல்லது "முதிர்ச்சியடைந்த" என்றும் மொழிபெயர்க்கப்படக்கூடும்.

B. பவுலுடைய ஊழியம், மற்றவர்கள் முழுவளர்ச்சிக்கென்று கிறிஸ்துவில் முதிர்ச்சியடைவதன்மூலம் பூரணமாகவும் முழுமையாகவும் இருக்கும்படி அவர்களுக்குள் கிறிஸ்துவைப் பகிர்ந்தளிப்பதாக இருந்தது.

**VII. ஆதியாகமம் 37—47 யாக்கோபுவினுடைய முதிர்ச்சியின் வழிமுறையைப் பற்றிய ஒரு பதிவாகும்:**

A. ஆதியாகமம் 27இல் நாம் ஓர் எத்தனை பார்க்கிறோம்; அதிகாரம் 37இல் ஒரு மறுசாயலாக்கப்பட்ட மனிதனைப் பார்க்கிறோம்; அதிகாரம் 47இன் முடிவில் ஒரு முதிர்ச்சியடைந்த நபரைப் பார்க்கிறோம்.

B. மறுசாயலாகுதலின் கடைசி நிலை முதிர்ச்சியாகும், அதாவது, ஜீவனின் நிறைவாகும்:

1. தேவனின் நித்தியத் திட்டம் நம் மறுசாயலாகுதல் மற்றும் முதிர்ச்சியின் மூலமாக மட்டுமே நிறைவேற்றப்பட முடியும்—1:26; கொலோ. 1:28; 2:19.
2. முதிர்ச்சி என்பது நாம் ஜீவனின் நிறைவைப் பெறும்வரை தெய்வீக ஜீவன் மீண்டும் மீண்டும் நமக்குள் பகிரப்படுகிறதைப் பெறுவது பற்றிய காரியம்—யோவா. 10:10.

C. முதிர்ச்சி என்பது கொள்திறனின் பெரிதாக்கத்தைப் பற்றிய காரியம்—சங். 4:1:

1. ஜீவனில் முதிர்ச்சி என்பது, பரிசுத்த ஆவியின் ஒழுங்குபடுத்துதலைப் பெறுவதின் கூட்டுமொத்தமாகும்—எபி.12:5-11.
2. ஜீவனில் முதிர்ச்சியடைந்த ஒரு நபரை மற்றவர்கள் பார்க்கக்கூடும், ஆனால் அந்த நபர் வருடங்களாய் நாளுக்கு நாள் இரகசியமாகப் பெற்றுக்கொண்ட பரிசுத்த ஆவியின் படிப்படியாக சேகரிக்கப்பட்ட ஒழுங்குபடுத்துதலை அவர்களால் பார்க்க முடியாது—2 கொரி. 1:8-10; ஆதி. 47:7, 10.

D. நாம் தேவனைக் கொண்டு நிரப்பப்படுவதற்கான அதிகரிக்கப்பட்ட கொள்திறனை உடையவர்களாய் இருக்குமாறு, நம்மை நிரப்பியிருக்கும் எல்லாவற்றிலிருந்தும் நம்மை வெறுமையாக்கவும், ஒவ்வொரு முன்னாக்கிரமிப்பையும் அப்புறப்படுத்தவும் தேவன் நபர்களையும், காரியங்களையும், நிகழ்வுகளையும் இறையாண்மையுடன் பயன்படுத்துவார்—லூக். 1:53; மத். 5:6.

E. நமக்கு நேரிடுகிற எல்லாம், நம் மறுசாயலாகுதலுக்காகவும் முதிர்ச்சிக்காகவும் தேவனுடைய இறையாண்மையின்கீழ் இருக்கிறது என்பதை யாக்கோபின் வாழ்க்கை வெளிப்படுத்துகிறது; எதுவும் தற்செயலானதல்ல:

1. முதிர்ச்சியடையும்படி, யாக்கோபு முதலில் தன் இருதயத்தின் பொக்கிஷமாகிய யோசேப்பின் இழப்பை அனுபவிக்க வேண்டியிருந்தது—ஆதி. 37:31-35.
2. ஒரு முதிர்ச்சியடைந்த விசுவாசி, தேவன் எல்லா விதமான சூழ்நிலையிலும் தன் தேவைகளை சந்திக்க இரக்கமுள்ளவராகவும் சகலத்திற்கும் போதுமானவராகவும் இருக்கிறார் என்பதைக் கற்றிருக்கிறான்—43:11, 13-14; 17:1; பிலி. 1:19-21; 4:11-12; ஒப். 1 தீமோ. 6:6-8.

3. அவனது நம்பிக்கையும் ஓய்வும் இனிமேல் தன்னிலோ, தன் திறமையிலோ இராமல், முற்றிலும் தனது சகலத்திற்கும் போதுமான தேவனுடைய இரக்கத்தில் இருக்கின்றன—ரோ. 9:16.
4. யாக்கோபுடைய முதிர்ச்சியின் பலமான அடையாளம், அவன் மற்றவர்களை ஆசீர்வதித்ததாகும்—ஆதி. 47:7, 10, 48:14-16; எபி. 7:7.

**VIII. முதிர்ச்சியடைந்த மணவாட்டியே தேவனுடைய சித்தமும் குறிக்கோளுமாவாள்—வெளி. 19:7-9.**

A. கூட்டு மணவாட்டியின் ஆயத்தநிலை, ஜெயங்கொள்பவர்களுக்கு ஜீவனிலுள்ள முதிர்ச்சியைச் சார்ந்துள்ளது—வ. 7; எபி. 6:1; பிலி. 3:12-15; எபே. 4:11.

B. செம்மறிக்குட்டியானவரின் கல்யாணம், தேவனுடைய புதிய ஏற்பாட்டுப் பொருளாட்சி நிறைவடைவதின் விளைவாகும்; அந்தப் பொருளாட்சி அவரது சட்டரீதியான மீட்பின் மூலமாகவும் அவரது தெய்வீக ஜீவனிலுள்ள அவரது ஜீவாதார இரட்சிப்பின் மூலமாகவும் கிறிஸ்துவுக்காக ஒரு மணவாட்டியை, அதாவது, சபையைப் பெறுவதாகும்—ஆதி. 2:22; ரோ. 5:10; வெளி. 19:7-9; 21:2.

C. யோவான் சுவிசேஷத்தில், கிறிஸ்து உலகத்தின் பாவத்தை எடுத்துப்போட வந்த செம்மறிக்குட்டியானவராகவும், மணவாட்டியைப் பெறும்படி வந்த மணவாளனாகவும் வெளிப்படுத்தப்படுகிறார்—3:29.

D. கிறிஸ்துவின் இலக்கு பாவத்தை அகற்றுவதல்ல, மணவாட்டியைப் பெறுவதாகும்:
1. வெளிப்பாடு புத்தகத்தில், கிறிஸ்துவே செம்மறிக்குட்டியானவராகவும் வரப்போகும் மணவாளனாகவும் இருக்கிறார் என்று நாம் பார்க்கிறோம்; எனவே, மணவாளனாக அவருக்கு ஒரு திருமணம் நடந்தாக வேண்டும்—19:7-9.
2. செம்மறிக்குட்டியானவரின் திருமணம் பிரபஞ்சமளாவிய திருமணமாக இருக்கும்; அது மீட்பர் மற்றும் மீட்கப்பட்டவர்களுடைய கல்யாணமாக இருக்கும்.
3. கிறிஸ்து மணவாளனாக வந்துகொண்டிருக்கிறார், நாம் மணவாட்டியாகச் சென்றுகொண்டிருக்கிறோம்.

E. மிகவும் முக்கியமான காரியம், மணவாட்டியின் ஆயத்தநிலையாகும்—வ. 7:
1. வெளிப்பாடு 19:8 மற்றும் 9இன்படி, இங்குள்ள கிறிஸ்துவின் மணவாட்டியாகிய மனைவி, ஆயிரவருட இராஜ்ஜியத்தின்போது இருக்கும் ஜெயங்கொள்பவர்களை மட்டும் உள்ளடக்குகிறாள்.
2. மணவாட்டியின் ஆயத்தநிலை ஜெயங்கொள்பவர்களுக்கு ஜீவனிலுள்ள முதிர்ச்சியைச் சார்ந்துள்ளது; இவர்கள் தனித்தனி நபர்கள் அல்ல, மாறாக, கூட்டான மணவாட்டி.
3. வெளிப்பாடு 19:6இல் பெருந்திரளானோரின் குரல், “அல்லேலூயா! சர்வவல்லமையுள்ள நம் தேவனாகிய கர்த்தர் ஆளுகைசெய்கிறாரே” என்று பறைசாற்றுகிறது:
   a. தேவனுடைய ஆளுகையாகிய இராஜ்ஜியம் செம்மறிக்குட்டியானவரின் கல்யாணத்தோடு தொடர்புடையது.
   b. திருமணம் கர்த்தருடைய ஆளுகையாகிய இராஜ்ஜியத்தைக் கொண்டுவரும், ஏனெனில் திருமணத்திற்கு அழைக்கப்பட்ட எல்லா விருந்தினர்களும் கூட்டான மணவாட்டியும், மணவாளனின் உடன் ராஜாக்களுமாய் இருப்பார்கள்; அவருடைய எல்லா உடன் ராஜாக்களும் அவருடைய கூட்டான மணவாட்டியாய் இருப்பார்கள்.
   c. ஜெயங்கொள்பவர்களுக்கு, ஆயிரவருட இராஜ்ஜியம் ஒரு திருமண விருந்தாக இருக்கும்.
   d. திருமண விருந்துக்கு அழைக்கப்பட்ட எல்லாரும், ராஜாக்களாக ஆயிரவருட ஆளுகையிலும் பங்கேற்பார்கள்.
   e. ஜெயங்கொள்பவர்களுக்கு, இராஜ்ஜியத்தில் கிறிஸ்துவுடன் ஆளுகைசெய்வது திருமண விருந்தாக இருக்கும்—வ. 9.